எம்.சி. எண்.19/2018     28.12.2020

எ.ம.சா.1                    சாட்சி.திரு.அழகையர்

குறுக்கு விசாரணை.

நான் என்னுடைய முதல் விசாரணையில் மனுதாரர் எனது மனைவி என்றும், எங்கள் இருவருக்கும் பரதன் என்ற மகன் இருக்கிறார் என்றும் ஒப்புக் கொண்டுள்ளேன் என்றால் சாிதான். என்னுடைய மனைவி கூலி வேலைக்கு சென்று எனது மகன் பள்ளி செலவையும் கவனித்து வருகிறார் என்று கூறியிருப்பது அடிப்படை இல்லாதது என்று எனது முதல் விசாரணையில் கூறியுள்ளார் என்றால் சாிதான். எனது மகனை நான் அரசு பள்ளியில் தான் சேர்த்திருந்தேன். அவர் தான் என் மகனை தனியார் பள்ளியில் சேர்த்து விட்டார். என்னுடைய முதல் விசாரணையில் எனது மனைவி வேலைக்கு செல்லவில்லை என்றும் எனது மகனின் படிப்பு செலவையும், வீட்டு செலவையும் கவனிக்கவில்லை என்று தான் சொல்லியுள்ளேன் என்றால் சாிதான். குற்றவியல் விசாரணை முறை சட்டம் 125 (1) (ஆ) பிாிவின் கீழ் தன்னை தானே பராமாித்து கொள்ள இயலாத மனைவி மற்றும் குழந்தையை கவனித்து கொள்ளவேண்டும் என்றால் சாிதான். என் மனைவி தன்னை தானே பராமாித்து கொள்ள இயலாதவர் என்று நான் முதல் விசாரணையில் ஒத்து கொண்டேன் என்றால் சாியல்ல. என் மகன் தன்னை தானே பராமாித்து கொள்ள இயலாதவர் என்று என்னுடைய முதல் விசாரணையில் ஒத்து கொண்டேன் என்றால் சாியல்ல. என்னுடைய மனைவியையும், மகனையும் பராமாித்து கொள்ள போதுமான வசதி உள்ளது என்றால் சாிதான். ஆனால் அதே சமயம் என் மனைவியையும் எனது மகனையும் நான் பராமாிக்காமல் புறக்கணித்து வருகிறேன் என்றால் சாியல்ல. கடந்த 11 வருடமாக என் மனைவிக்கும், மகனுக்கும் ஜீவனாம்சம் கொடுக்க கடமைப்பட்டவர் என்று சொன்னால் சாியல்ல. நான் என் மனைவிக்கும், மகனுக்கும் ஜீவனாம்சம் கொடுத்து பராமாிக்க கடமைப்பட்டவர் என்று சொன்னால் சாியல்ல.

(குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)

ஓம்/ - அழகையர்

ஓம்/ - ஆ.சீதாலெட்சுமி
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
ஓமலூர்.